# நமது தின கனி


காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 88 | 4 Pages | 30.10.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 88 | 4 பக்கங்கள் | 30.10.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## தேர்தல் 2024: முன்னாள் துணை அதிபர் மைக் பென்ஸ் அதிரடி முடிவு



அமெரிக்கா, அக். 30

அமெரிக்காவில், ஜனநாயக கட்சியை சேர்ந்த ஜோ பைடன் தற்போதைய அதிபராக உள்ளார். வரவிருக்கும் தேர்தலில், அவரை எதிர்த்து குடியரசு கட்சியின் சார்பில் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் போட்டியிட உள்ளார். ஆனால், டொனால்ட் டிரம்ப் மீது பல வழக்குகள் உள்ளதால், அவர் அதிபர் வேட்பாளராக களம் இறங்குவதில் உறுதியற்ற தன்மை நீடிக்கிறது.

இதனால், அக்கட்சியில் அவருக்கு அடுத்து பல முன்னணி தலைவர்கள் ஆர்வமுடன் நாடு முழுவதும் தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர். தற்போதைய நிலவரப்படி, டொனால்ட் டிரம்பிற்கு அடுத்த இடத்தில் இந்திய வம்சாவளி தொழிலதிபரான விவேக் ராமசாமி முன்னிலை வகிக்கிறார்.

அந்நாட்டு மரபுப்படி அமெரிக்காவிற்கு உள்ள சிக்கல்கள், அந்நாடு சந்தித்து வரும் சவால்கள், அவற்றுக்கான தங்களது தீர்வுகள் ஆகியவற்றை பல கூட்டங்களில் வேட்பாளர் போட்டியில் இடம்பெறுபவர்கள் விளக்க வேண்டும். இதில் அவர்களுக்கு கிடைக்கும் மக்கள் ஆதரவை பொறுத்து அவர்களுக்கு இறுதி வேட்பாளராக களம் இறங்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

குடியரசு கட்சியின் சார்பில் முன்னாள் அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸ் (Mike Pence), 2024 அதிபர் தேர்தலில் போட்டியிட விரும்பி களத்தில் இருந்தார்.

இந்நிலையில், தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு வந்த மைக் பென்ஸ், அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற குடியரசு கட்சியின் யூதர்களுக்கான கூட்டமைப்பில் கலந்து கொண்டு பேசிய போது, "விரிவான கலந்துரையாடல்கள் மற்றும் சந்திப்புகளுக்கு பிறகு நான் போட்டியிலிருந்து விலகுகிறேன். மலையேறுதலை போன்ற கடினமான சவாலான போட்டி இது என்பது தெரிந்தே இருந்தது. விலகுவதால் எனக்கு எந்த வருத்தமுமில்லை" என அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவி வகித்த போது, அவரது நம்பிக்கைக்குரியவராக கருதப்பட்ட மைக் பென்ஸ், தற்போது போதுமான மக்கள் ஆதரவு இல்லாததாலும், நிதி நெருக்கடியினாலும் இவ்வாறு முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இதனால் அவரது ஆதரவாளர்கள் வருத்தமடைந்துள்ளனர்.

## எர்டோகன் உரை எதிரொலி: பின்னடையும் இஸ்ரேல்–துருக்கி உறவு



துருக்கி, அக். 30

தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தி ஆயிரக்கணக்கானோரை கொன்ற ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழிக்க, பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் போர் தொடுத்து காசா பகுதி முழுவதும் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல், ஹமாஸ் ஆகிய இரு தரப்பினரக்கும் பல உலக நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், துருக்கி நாட்டு அதிபர் டாயிப் எர்டோகன் (Tayyip Erdogan), அந்நாட்டில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக சுமார் 15 லட்சம் பேர் நடத்திய ஒரு பேரணியில் உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:

காசாவில் நடைபெறும் அனைத்து குற்றங்களுக்கும், படுகொலைகளுக்கும் மேற்கத்திய நாடுகளே காரணம். இஸ்ரேலும், கிறித்துவர்களை இஸ்லாமியர்களுக்கு எதிராக மாற்றியுள்ளது. மேற்கத்திய நாடுகளை ஒன்று கேட்க விரும்புகிறேன். பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக நடந்தது போல் மீண்டும் இரு மதத்தினருக்கிடையே (பிறைசிலுவை போர்) சச்சரவு நிகழ வேண்டுமா? மத்திய தரை கடல் பகுதியில், இஸ்ரேல் நாட்டை மேற்கத்திய நாடுகள் தங்கள் அதிகார ஆட்டத்திற்கு ஒரு பகடைக்காயாக மாற்றி விட்டன. இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்பு நாடாக மாறி விட்டது.

இவ்வாறு அவர் பேசினார்.

இதனையடுத்து, துருக்கியில் உள்ள இஸ்ரேல் தூதரக அதிகாரிகளை அங்கிருந்து வெளியேறுமாறு இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் உத்தரவிட்டார். மேலும், இஸ்ரேல்துருக்கிக்கான இரு நாட்டு உறவு மறுபரிசீலனை செய்யப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

சுமார் பத்தாண்டு காலம் சீரற்று இருந்த இஸ்ரேல்துருக்கி பொருளாதார மற்றும் அரசியல் உறவு, சமீபத்தில்தான் சுமூக நிலைமையை அடைந்தது. இந்நிலையில், இந்த சம்பவம், இரு நாட்டு உறவுக்கு ஒரு பின்னடைவாக அரசியல் விமர்சகர்களால் பார்க்கப்படுகிறது.

## கஜகஸ்தான் சுரங்கத்தில் தீ விபத்து 32 பேர் பலி



அஸ்தானா, அக். 30

மத்திய ஆசிய நாடான கஜகஸ்தானின் காரகண்டா பகுதியில் நிலக்கரி சுரங்கங்கள் அதிகம் உள்ளன. அங்குள்ள கோஸ்டென்கோ சுரங்கத்தை ஆர்சிலர் மிட்டல் டெம்ரிடாவ் என்ற தனியார் நிறுவனம் குத்தகை எடுத்துள்ளது. இந்நிலையில், நேற்று கோஸ்டென்கோ நிலக்கரி சுரங்கத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அப்போது சுரங்கத்தில் 250க்கும் மேற்பட்டோர் பணியில் இருந்துள்ளனர். மீத்தேன் வாயு கசிவால் இந்த தீ விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த விபத்தில் 32 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். விபத்தில் மாயமான 14 பேரை தேடி வருகின்றனர். இதையடுத்து, தீவிபத்து குறித்து விசாரணை நடத்த கஜகஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த துயர சம்பவத்துக்கு கஜகஸ்தான் அதிபர் காசிம் ஜோமார்ட் மற்றும் ரஷிய அதிபர் புதின் ஆகியோர் இரங்கல் தெரிவித்தனர்.

# தமிழக தொழில்துறையில் டி.வி.எஸ். நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது: முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, அக். 30

சென்னை கிண்டியில் டி.எஸ்.சீனிவாசன் நூற்றாண்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது:


டி.வி.எஸ். என்ற மூன்றெழுத்தின் நிறுவனத்தை வாழ்த்த தி.மு.க. என்ற மூன்றெழுத்தின் தலைவர் வந்திருக்கிறேன்.

டி.வி.எஸ். முக்கிய நிறுவனம் என்பதை யாரும் மறைக்க முடியாது. இன்று இருசக்கர வானங்கள் எது வந்தாலும், ஏழை எளிய மக்களின் வாகனமாக திகழ்ந்தது டி.வி.எஸ்.தான்.

வாரிசுகள் திறமைசாலிகளாக இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு வேணு சீனிவாசன் உள்ளிட்டோர் திகழ்கின்றனர்.

வாரிசு என்றதும், ஏதோ அரசியல் பேசுவதாக நினைக்க வேண்டாம். தொழிலாளர்களின் மீது அக்கறை கொண்டவராக விளங்கினார்.

டி.வி.எஸ். நிறுவனம் போன்று அனைத்து நிறுவனங்களும் கிராமப்புறங்களுக்கு உதவ வேண்டும். டி.வி.எஸ். போன்ற பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உருவாக வேண்டும். வேணு சீனிவாசனை போன்ற பல தொழிலதிபர்கள் நமக்கு தேவை. தமிழக தொழில்துறையில் டி.வி.எஸ். நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது.




உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை பெரிய அளவிற்கு நடத்த திட்டமிட்டுள்ளோம். உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு வேணு சீனிவாசன் பொறுப்பேற்று பணியாற்ற வேண்டும். நம்ம ஸ்கூல் திட்டத்திற்கு இதுவரை ரூ.150 கோடி நிதி வந்துள்ளது என தெரிவித்தார்.

# மருது பாண்டியர்கள் தேவர் பக்தர்கள் குழு சார்பில் நடைபெற்ற முக்குலத்தோரின் முப்பெரும் விழா

திருப்பூர், அக். 30

திருப்பூர் மாநகராட்சி அருகே ஏபிடி ரோடு சாலையில் மருதுபாண்டியர் தேவர் பக்தர்கள் குழு சார்பில் நடைபெற்ற மாமன்னர் மருதுபாண்டியர்கள் 222 வது குருபூஜை விழா மற்றும் பசும்பொன் உ முத்துராமலிங்கத் தேவர் 116 வது ஜெயந்தி விழாவினை முன்னிட்டு மாபெரும் அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி ஏ பி டி ரோடு சரவணன் தலைமையில் நடைபெற்றது

இந்த அன்னதான விழாவினை அம்மா மக்கள் முன்னேற்றக் கழக முன்னாள் நொய்யல் பகுதி கழக செயலாளர் சித்திக் பாய், துவக்கி வைத்தார்

இந்த நிகழ்வில்கார்த்திக். சுவை பாலு தேவர். சாய் சுந்தரதேவர், விக்னேஷ், மாலை பாண்டி, லட்சுமணன், உள்ளிட்ட தேவரினதலைவர் கள்ஊர் பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்



# தீபாவளி பண்டிகை நெருங்குவதால் ஆடுகளுக்கு கடும் கிராக்கி விவசாயிகள் மகிழ்ச்சி

மூலனூர், அக். 30

தமிழகத்தில் நடைபெறும் முக்கிய ஆட்டுச்சந்தைகளில் ஒன்று கன்னிவாடி ஆட்டுச்சந்தையாகும். இந்த சந்தை வாரந்தோறும் வெள்ளிக்கிழமை நடைபெற்று வருகிறது.இங்கு கோவை, பொள்ளாச்சி, உடுமலை, மதுரை, திருச்சி, சென்னை போன்ற தமிழகத்தின் பெரு நகரங்கள் மட்டுமின்றி கேரளா,கர்நாடகா,ஆந்திராபோன்ற அண்டை மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் வந்து ஆடுகளை இறைச்சிக்காக வாங்கி செல்கின்றனர்.

அதேபோல் கன்னிவாடி மற்றும் மூலனூர், வெள்ளகோவில், பரமத்தி மற்றும் அதனை சுற்றியுள்ள



கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தங்களது ஆடுகளைவிற்பனைக்காக இங்கு கொண்டு வருகின்றனர். கடந்த 2 வாரங்களாக இந்த பகுதியில் நல்ல மழை பெய்து வருவதால் மேலும் செம்மறி மற்றும் மேச்சேரி இன ஆடுகளால் நல்லலாபம்கிடைக்கும் என்பதால் இனி வரும் காலங்களில் மழைக்காலம் தொடங்குவதால் இந்த பகுதியில் மேய்ச்சல் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தால்அதிக லாபம் தரும் மேச்சேரி இன மற்றும் செம்மறி ஆடுகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது

இதனால் ஆடுகளின் விலை சற்று அதிகமாகவே இருந்தது. கடந்த வாரத்தில் 10 கிலோ கொண்ட செம்மறி ஆடு ரூ.7ஆயிரத்து 500க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த வாரத்தில் ஒரு கிலோ ரூ.770 என்ற அடிப்படையில் 10 கிலோ எடை கொண்ட ஒரு செம்மறி ஆட்டின் விலை ரூ.7ஆயிரத்து 700 ஆகும். இதனால் கன்னிவாடி சுற்றுவட்டார பகுதியில் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த வாரம் சுமார் 1000க்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனைக்கு வந்திருந்தன. தீபாவளி பண்டிகை நெருங்குவதால் ஆடுகளின் விலை மேலும் உயரும் என்பதால் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# இளம் ஏற்றுமதியாளர்களுக்கு பின்னலாடை தயாரிப்பு புதிய தொழில்நுட்ப கருத்தரங்கு: திருப்பூரில் 2ந் தேதி நடக்கிறது

திருப்பூர், அக். 30

திருப்பூரில் இளம் ஏற்றுமதியாளர்கள் பின்னலாடை தொழில் துறையின் நுட்பங்களை அறியும் வகையில் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் சார்பில் காபி வித் எக்ஸ்பர்ட் என்ற கருத்தரங்கை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் எதிர்கால பின்னலாடை தயாரிப்பின் புதிய தொழில்நுட்பம் மற்றும் மேம்பாடு என்ற



தலைப்பில் வருகிற 2ந் தேதி மாலை 5 மணிக்கு அப்பாச்சி நகரில் உள்ள திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க அலுவலகத்தில் சக்திவேல் அரங்கில் நடக்கிறது.

சாய் இன்வெர்ட் கன்சல்டன்சி நிறுவனர் வையுறு அமர்நாத் சிறப்புரை ஆற்ற உள்ளார்.

இவர் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஜவுளி தொழிற்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்.

சென்னை அழகப்பா தொழில்நுட்பக்கல்லூரியின் ஜவுளி தொழில்நுட்பநிறுவனராக பணியாற்றியவர். இந்த கருத்தரங்கில் இளம் ஏற்றுமதியாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

# பருவ பயிர்களை காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

தருமபுரி, அக்.30

தருமபுரி வட்டாரத்தில் சம்பா பருவ நெல் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது.

இந்த நிலையில் திருந்திய பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டு 2023–24 பருவத்திற்கான நெல் மற்றும் பருத்தி பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் காப்பீடு செய்யலாம்.

குறுவட்டம் வாரியாக அறிவிக்கப்பட்ட பயிர்களை சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளும் பயன்பெற தகுதியானவர்கள். பயிர் கடன் பெறும் விவசாயிகளும் இதில் சேர்த்துக்கொள்ளபடுவர்.

மற்ற விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில் சேரலாம்.

விதைப்பு தவிர்த்தல், விதைப்பு தோல்வியுறுதல், பயிரிட அபாயம் ஏற்படும் சூழ்நிலையில் விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் பயிர் இழப்பு, அறுவடைக்குப்பின் ஏற்படும் மகசூல் இழப்பு, புயல், ஆலங்கட்டி மழை, மண் சரிவு, வெள்ளம் போன்ற இயற்கை இடற்பாடுகளினால் ஏற்படும் பயிர் இழப்பு ஆகியவற்றிற்கு காப்பீடு வழங்கப்படுகிறது.

எனவே நெல் (சம்பா பருவம்) மற்றும் பருத்தி பயிர்களை சாகுபடி செய்துள்ளவிவசாயிகள் இத்திட்டத்தில் பெருமளவில் சேர்ந்து பயனடையமாறு நல்லம்பள்ளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேன்மொழி தெரிவித்துள்ளார்.

# திருப்பூர்: ஏற்றுமதி ஆர்டர் இல்லாததால் முடங்கும் விசைத்தறி ஜவுளித்தொழில்



மங்கலம், அக். 30

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 2.5 லட்சம் விசைத்தறிகள் இயங்குகின்றன. மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய, பெரிய ஸ்பின்னிங் மில்கள் செயல்படுகின்றன. இத்தொழில்களை நம்பி பல லட்சம் தொழிலாளர்கள் உள்ளனர்.

கடந்த பல மாதங்களாகவே விசைத்தறி ஜவுளித்தொழில் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. நிலையில்லாத பஞ்சு விலை, நூல் விலையால் ஸ்பின்னிங் மில்களை முறையாக இயக்க முடியாமல் உரிமையாளர்கள் தவிக்கின்றனர். உற்பத்தியையும் குறைத்து விட்டனர். சில மில்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன. அதேபோல் கூலிஉயர்வுகிடைக்காதது, மின் கட்டண உயர்வு, பாவு நூல் சப்ளை இல்லாதது உட்பட பல காரணங்களால் 90 சதவீத விசைத்தறிகள் முடங்கியுள்ளன.

கருமத்தம்பட்டி, சோமனூர் சுற்றுவட்டாரத்தில் உள்ள மில்களில் உற்பத்தி செய்யப்படும் நூல் ரகங்கள், வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப வெளி மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இயல்பாக இருந்த நூல் ரகங்களின் விலை கடந்த சில மாதங்களாக வீழ்ச்சியடைந்து வருகிறது. கடந்த மாதத்தில் இருந்த விலையை விட 20 சதவீதம் வரை குறைந்துள்ளது. நூல் ரகங்களின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால் மில் உரிமையாளர்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

இது குறித்து மில் உரிமையாளர் சந்திரன் கூறுகையில், தொடர்ந்து நூல் விலை சரிந்து வருவதால் உற்பத்தியை குறைந்துள்ளோம். ஒரு ஷிப்ட் மட்டுமே இயக்குகிறோம். ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட நூல் ரகங்களுக்கு உரிய விலை கிடைக்காமல் தேங்கியுள்ளது. தற்போதைய விலைக்கு விற்றால் நஷ்டம் தான் ஏற்படும்.

இதேபோல் விலை வீழ்ச்சி அடைந்தால் மில்லை இயக்க முடியாது என்றார்.

கடந்த பல மாதங்களாக, துணி ரகங்களுக்கும் உரிய விலை கிடைக்காததால் பல கோடி மீட்டர் துணிகள் குடோன்களில் தேங்கியுள்ளன. ஜவுளி உற்பத்தியாளர்கள் செய்வதறியாது உள்ளனர்.

இது குறித்து ஜவுளி உற்பத்தியாளர்கள் கூறுகையில், வெளிநாட்டு ஆர்டர்கள் கிடைத்தால் தான் இங்கு உற்பத்தியாகும் காடா துணிகள் விற்பனையாகும். ஆனால் வெளிநாட்டு ஆர்டர்கள் தற்போது சுத்தமாக இல்லை. வடநாட்டில் கேட்டாலும் ஆர்டர் இல்லை என்றுதான் கூறுகின்றனர். அதன் காரணமாக பல கோடி மீட்டர் துணி ரகங்கள் தேங்கி கிடக்கின்றன.

வேறு வழியில்லாமல், பாவு நூல் சப்ளையை நிறுத்தி விட்டோம். தொழிலாளர்களிடம் தீபாவளி பண்டிகை முடிந்து வேலைக்கு வந்தால் போதும் என அனுப்பி விட்டோம். நஷ்டம் ஏற்படாமல் உரிய விலை கிடைக்கும் போது தான் துணிகளை விற்கும் நிலையில் உள்ளோம் என்றனர்.

விசைத்தறி கூடங்கள், ஸ்பின்னிங் மில்கள் முழுமையாக இயக்கப்படாததால், பல ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். குடும்பத்தை நடத்த, கட்டட தொழில் உட்பட மாற்றுப் பணிகளை தேடி சென்று விட்டனர்.

மொத்தத்தில் விசைத்தறி ஜவுளி தொழில், தற்போதையநிலையில்கடும் நெருக்கடிகளில் சிக்கி தவிக்கிறது. மத்திய, மாநிலஅரசுகள்இணைந்து உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனில் தொழிலில் ஏற்படும் வீழ்ச்சியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றனர்.

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் மட்டும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட சாதாரண விசைத்தறிகள் உள்ளன. இங்கு மட்டும், தினசரி ஒரு கோடி மீட்டர் துணி உற்பத்தியும், 50 கோடி ரூபாய் அளவுக்கு வரவு, செலவு கணக்கும் நடைபெறுகிறது. இதில் 80 சதவீத துணிகள் மதிப்பு கூட்டப்பட்டு உள்நாட்டிலேயே குறைந்த விலையில் பயன்படுத்தப்படுகிறது.

கோவை, திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர் சங்கத்தினர், மத்திய இணையமைச்சர் முருகனுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

விசைத்தறிகள் வாயிலாக கிராமப்புறங்களில் உள்ள பல லட்சம் ஏழை, எளிய குடும்பத்தினர் பயன் பெறுகின்றனர். இந்திய அளவில் 40 சதவீத கிரேகாடாதுணி, கோவை, திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் உற்பத்தியாகிறது.


சாதா விசைத்தறியாளர்கள், மூன்றாண்டுக்கு ஒரு முறை கூலி உயர்வுக்காகவும், மின் கட்டணம் உயர்வுஏற்படும்போதெல்லாம் மின்கட்டணகுறைப்புக்காகவும் போராடி வருகின்றனர்.

வட மாநிலங்களில் மட்டுமே இங்கு தயாராகும் காடா துணிகள் மதிப்பு கூட்டப்படுகின்றன. சிறு, குறு விசைத்தறியாளர்கள், உற்பத்தி செய்யும் குறைந்தளவு துணிகளை, வட மாநிலங்களில் நேரடியாக கொண்டு சென்று விற்க முடியாது. இடைத்தரகர்கள் வாயிலாக விற்கும் போது, குறைந்த விலைக்கே விற்க வேண்டியுள்ளது.

ஏற்றுமதி தரம் வாய்ந்த துணிகளை உற்பத்தி செய்யவும், உற்பத்தியை அதிகரிக்கவும், சாதாரணவிசைத்தறிகள் நவீனப்படுத்தப்பட வேண்டும்.

சோமனூர் கிளஸ்டர் பகுதியில் ஜவுளிச்சந்தை அமைக்க வேண்டும். இதற்கு மத்திய அரசு அனுமதியும், மானியமும் வழங்க வேண்டும். அதன் வாயிலாக சாதாரண விசைத்தறிகளை நவீனப்படுத்தி கொள்ள முடியும். வருமானம் பெருகும். வாழ்வாதாரம் உயரும்.

# சிறை நூலகங்களுக்கு 1,500 புத்தகங்கள் நன்கொடை: முதலமைச்சர் வழங்கினார்




சென்னை, அக். 30

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. தலைவராக பொறுப்பேற்ற 2018ம் ஆண்டு முதல், தன்னை சந்திக்க வருபவர்கள் பூங்கொத்து, பொன்னாடைகளை தவிர்த்து, அறிவியக்கத்தை உருவாக்க புத்தகங்களை வழங்கும்படி வேண்டுகோள் விடுத்தார். பின்னர் இதுவரை தனக்கு அளிக்கப்பட்ட 2 லட்சம் புத்தகங்களை தமிழ்நாடு மற்றும் அயலகத்தில் வாழும் தமிழர்களின் வேண்டுகோளை ஏற்று, அவர்களின் நூலகங்களுக்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள சிறைவாசிகளிடையே புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும், அவர்களின் மன அழுத்தத்தை போக்குவதற்காகவும், அவர்களின் மனதில் நற்சிந்தனைகளை விதைக்கும் விதமாகவும், மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட சிறையில் உள்ள 'பார்ஸ்டல்' பள்ளி ஆகியவற்றில் சிறை நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இந்நூலகங்களில், பலவகையான புத்தகங்கள், பல்வேறு வகையான செய்தித்தாள்கள், வார மற்றும் மாத இதழ்கள் வைக்கப்பட்டு உள்ளன.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில் முதன்முறையாக சிறைத்துறை பங்கேற்று, ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் சிறை நூலகங்களுக்கு நன்கொடையாக பெற்றுள்ளது.

அனைத்துசிறைகளிலும் உள்ள சிறை நூலகங்களை மேம்படுத்த தமிழ்நாடு அரசு 20232024ம் ஆண்டில் ரூ.2 கோடியே 8 லட்சத்து 74 ஆயிரம் ஒதுக்கியுள்ளது.

இந்த சிறை நூலகங்களில், புத்தகங்களின் எண்ணிக்கையை உயர்த்தும் விதமாகவும், சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு இப்புத்தகங்கள் பேருதவியாக அமையும் என்பதை கருத்தில் கொண்டும், தன்னை சந்திக்க வருபவர்கள் அளித்த புத்தகங்களில் 1,500 புத்தகங்களை நேற்று தலைமைச் செயலகத்தில் சிறைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நன்கொடையாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்துறை துணைத்தலைவர் கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உடுமலை சாலை மறியல் போராட்டத்தில் தி.மு.க.,அ.தி.மு.க.வினர் பயங்கர மோதல்



உடுமலை, அக். 30

திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்துள்ள சங்கராமநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட மயிலாபுரம் பகுதியில் கடந்த சில தினங்களாக முறையாக குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை என கூறப்படுகிறது.

இந்தநிலையில் நேற்று இரவு அ.தி.மு.க. மற்றும் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் 200 பேர் உடுமலை சாலையில் அரசு பேருந்துகளை சிறை பிடித்து காலி குடங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தி.மு.க.வை சேர்ந்த சங்கராமநல்லூர் பேரூராட்சி தலைவர் மல்லிகாவின் கணவர் கருப்புசாமிமற்றும்தி.மு.க.வினர் பேச்சு வார்த்தை நடத்த வந்தனர்.

பேச்சுவார்த்தையின் போது அ.தி.மு.க. தி.மு.க.வினருக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டு மோதல் உண்டானது. இதில் ஒருவருக்கொருவர் தாக்கி கொண்டதில், தி.மு.க. பேரூர் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் பிரகதீஸ்வரனின் மண்டை உடைந்தது.

அ.தி.மு.க. எம்.ஜி.ஆர். இளைஞரணி செயலாளர் சந்தோஷ் கவுதம் மற்றும் மகேஸ்வரன் ஆகியோருக்கு காயங்கள் ஏற்பட்டது. அவர்கள் மடத்துக்குளம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து தி.மு.க.வை சேர்ந்த பிரகதீஸ்வரன் கொடுத்த புகாரின்பேரில் அ.தி.மு.க.வை சேர்ந்த சந்தோஷ் கவுதம், கருப்புசாமி ஆகியோர் மீது குமரலிங்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். உடுமலை அருகே தி.மு.க., அ.தி.மு.க.வினர் மோதிக் கொண்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பருவமழை கைகொடுக்கும் நம்பிக்கையில் மானாவாரியாக மக்காச்சோளம் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்

மடத்துக்குளம்: அக். 30

உடுமலை, குடிமங்கலம், மடத்துக்குளம் வட்டாரங்களில் பி.ஏ.பி., மண்டல பாசனத்துக்கு பிரதான சாகுபடியாக மக்காச்சோளம் இருந்தது. தீவன உற்பத்திக்கு மக்காச்சோளம் தேவை அதிகமாக இருப்பதால் நல்ல விலையும் கிடைத்து வந்தது. வழக்கமாக ஆகஸ்டு மாதத்தில் மண்டல பாசனத்துக்கு திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும்.

அதையொட்டி நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பயிரின் வளர்ச்சி தருணத்தில் பருவ மழை பெய்யும். எனவே அந்த சீசனில் 40 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக மக்காச்சோளம் சாகுபடி செய்யப்படும். இந்தாண்டு மண்டல பாசனத்துக்கு தண்ணீர் ஒரு சுற்றாக குறைக்கப்பட்டது. மழையும் பெய்யவில்லை. இதனால் நான்காம் மண்டல ஆயக்கட்டு பகுதியில் விவசாயிகள் மக்காச்சோளம் நடவு செய்ய ஆர்வம் காட்டவில்லை. சிலர் மட்டும் உலர் தீவன தேவைக்காக மக்காச்சோளம் சாகுபடி செய்தனர். இந்நிலையில் கடந்த வாரம்பரவலாகஅனைத்து பகுதிகளிலும் விளைநிலங்களில் உழவு செய்யும் அளவுக்கு மழைப்பொழிவு இருந்தது.

இதையடுத்து பெரும்பாலான விவசாயிகள் பருவமழை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் மானாவாரியாக மக்காச்சோளம் நடவு செய்ய துவங்கியுள்ளனர்.

இது குறித்து விவசாயிகள்கூறியதாவது:

மக்காச்சோளம் 90 110 நாட்கள் வயதுடையது. பயிரின் வளர்ச்சித்தருணம் மற்றும் கதிர் பிடிக்கும் போது மழை பெய்தால் இறவை பாசனம் போல மானாவாரியிலும், விளைச்சல் கிடைக்க வாய்ப்புள்ளது.

குறித்த நேரத்தில் மழை பெய்யாவிட்டால் பயிரின் வளர்ச்சி பாதித்து கதிர்கள் சரியாக பிடிக்காது. விளைச்சலும் ஏக்கருக்கு 100 கிலோ கொண்ட 10 மூட்டையாக குறைந்து விடும்.

இருப்பினும் மக்காச்சோள பயிர்களை கால்நடைகளுக்கு உலர் தீவனமாக பயன்படுத்தலாம். வறட்சியால் தீவனத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதால் மானாவாரியாக மக்காச்சோளம் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டுகிறோம் என்றனர்.

# தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை பொதுக்கூட்டம்



தஞ்சாவூர்: அக். 30

தஞ்சையில் இன்று தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை மாநில பொதுக்குழு கூட்டம் இன்று மாநிலத் தலைவர் முத்துக்குமார் தலைமையில் நடைபெற்றது.

பொதுச் செயலாளர் ராஜா வரவேற்றார். பொருளாளர் பொன்னுச்சாமி, இளைஞரணி தலைவர் ஜெயபாலன் , மாநில அவைத்தலைவர் ராதாகிருஷ்ணன், மாநில அமைப்பு தலைவர் தங்கராஜ், கௌரவ ஆலோசகர் சக்திவேல், உஜ்ஜையினி மாகாளியம்மன் திருப்பணிக்குழு செயலாளர் துரையரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் 2023ம் ஆண்டிற்கான சிறப்பு மலரின் முதல் பிரதியை வணிகப்பூஷனம் டாக்டர் வெள்ளைச்சாமி நாடார் வெளியிட மாநில அமைப்பு தலைவர் கணேசன் பெற்றுக்கொண்டார்.

இதையடுத்து சேலம் நகர அனைத்து வணிகர் சங்கம் பொதுச் செயலாளர் ஜெயசீலன் சிறப்புரையாற்றினார். தலைமை ஒருங்கிணைப்பாளர் அருண்குமார் தீர்மானங்கள் விளக்க உரையாற்றினார்.

இந்த பொதுக்குழு கூட்டத்தில், தென்காசி மாவட்டத்தில் வருகிற டிசம்பர் மாதம் சுதேசி, தொழில் பாதுகாப்பு மாநாடு நடத்த வேண்டும். அதில் கலந்து கொள்ள அரசியல் கட்சி தலைவர்களை அழைக்க வேண்டும். விதேசிகளை வளர்த்திடவும், சுதேசிகளை அழித்திடவும் முனைப்புடன் செயல்படும் தேச விரோத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் . மின் கட்டணம் உயர்வை குறைத்திட வேண்டும். தக்கல் முறையில் விதிக்கப்படும் மின் கட்டண உயர்வினை கைவிட வேண்டும் . ஒருங்கிணைந்த தென் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் . கடைகளில் மாமூல் கேட்பதும், மறுக்கும் கடை உரிமையாளர்களை தாக்குவதுமான செயலுக்கு கடை உரிமையாளர்கள் கொடுக்கும் புகாரின் அடிப்படையில் சமூக விரோதிகள் மீது சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒருங்கிணைந்த கோவை மண்டலத்தை தொழில் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து அந்நிய முதலீடு ஆன்லைன் வியாபாரத்தை தவிர்ப்போம். உள்ளூர் வியாபாரிகளை ஊக்குவிப்போம். நம் கடைகளில் பொருட்களைவாங்குவோம் என்று வலியுறுத்தப்பட்டன.

இந்த பொதுக்குழு கூட்டத்தில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன், மாவட்டத் தலைவர் துரையரசன் ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் தஞ்சை மண்டல ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

# கூட்டுறவு வங்கி ஊழியர் வீட்டில் 60 பவுன் நகை கொள்ளை

பண்ருட்டி, அக். 30

பண்ருட்டி அருள்ஜோதி நகரில் உள்ள பஞ்சமுக ஆஞ்சனேயர் கோவில் எதிரில் வசிப்பவர் முருகன் (வயது 55). இவர் பண்ருட்டி கூட்டுறவு வங்கியில் பணி செய்து வருகிறார்.



இவரது மனைவி சுலோச்சனா (47). இவர் செவிலியராக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்று வீட்டில் இருந்து வருகிறார்.

இவர்களது மகன் கோயம்புத்தூரில் வசித்து வருகிறார். அவரை காண முருகன், சுலோச்சனா தம்பதியினர் வீட்டினை பூட்டிவிட்டு கடந்த 21ந் தேதி கோயம்புத்தூருக்கு சென்றனர். நேற்று நள்ளிரவு வீடு திரும்பினர். அப்போது வீட்டின் மதில் சுவர் கேட்டை திறந்து போது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

பதட்டத்துடன் உள்ளே சென்று பார்த்தபோது வீட்டினுள் பொருட்கள் அனைத்தும் சிதறி கிடந்தது. பீரோ உடைத்து, ரகசிய அறையில் இருந்த 60 பவுன் தங்க நகைகள், 1 கிலோ வெள்ளி பொருட்கள், ரூ.4 லட்சம் பணம் கொள்ளைபோயிருந்தது.

இது குறித்து பண்ருட்டி போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் பண்ருட்டி துணை போலீஸ் சூப்பிரண்டு சபியுல்லா, இன்ஸ்பெக்டர் கண்ணன், சப்இன்ஸ்பெக்டர்கள் தங்கவேலு, பிரசன்னா மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.


கடலூரில் இருந்து மோப்ப நாயும், கைரேகை நிபுணர்களும் வரவழைக்கப்பட்டனர். வீட்டிற்குள் வலம் வந்த மோப்ப நாய், வெளியில் வந்து 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் ஓடியது. யாரையும் கவ்விப் பிடிக்கவில்லை.

தொடர்ந்து அங்கு வந்த கைரேகை நிபுணர்கள் வீட்டின்மதில்சுவர், கதவு, பீரோ போன்றவற்றில் இருந்த தடயங்களையும், கைரேகைளையும் சேகரித்தனர். இதையடுத்து அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. பதிவுகளை பண்ருட்டி போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர். இதில் சந்தேகப்படும்படியான நபர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும், விசாரணைக்கு பின் அவர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்படுமென போலீசார் கூறினார்கள்.

கூட்டறவு வங்கி ஊழியர் வீட்டில்தங்கநகை, வெள்ளி பொருட்கள், பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பண்ருட்டி பகுதியில் பரபரப்பையும், பொதுமக்களிடம் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.




# சிவன் கோவில்களில் அன்னாபிஷேகம்



தரங்கம்பாடி, அக். 30

ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் பௌர்ணமியன்று சிவாலயங்களில் அன்னாபிஷேகம் நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் நிகழாண்டு ஐப்பசி மாத பௌர்ணமியையொட்டி மயிலாடுதுறையில் பல்வேறு சிவாலயங்களில் அன்னாபிஷேகம் நடைபெற்றது. சேந்தங்குடி வள்ளலார் கோயில் என்றுஅழைக்கப்படும் ஸ்ரீ வதான்யேஸ்வரர் கோயிலில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, அன்னத்தால் அலங்காரம் செய்யப்பட்டது. காய்கறிகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் அன்னாபிஷேக தரிசனம் செய்தனர். இதே போல், அபயாம்பிகை மயில் உருவக்கொண்டு சிவனை வழிபட்ட தலமான மயிலாடுதுறை மாயூரநாதர் கோயிலில் சுவாமிக்கு அன்னாபிஷேகம் நடைபெற்றது. திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான இக்கோயிலில் மாயூரநாதருக்கு சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டு, அன்னத்தால் அபிஷேகம் செய்யப்பட்டு அன்னாபிஷேகம் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வழிபாடு நடத்தினர். மேலும் பல்வேறு கோயில்களில் நடைபெற்ற அன்னாபிஷேக விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபாடு நடத்தினர்.

# கொலை வழக்கில் தலைமறைவானவர் கைது

தரங்கம்பாடி, அக்.30

மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடு காவல் சரகம் பூதங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் குருமூர்த்தி (வயது 52). இவர் கடந்த 2002ம் ஆண்டு கேட்ட பணத்தை கொடுக்காத ஆத்திரத்தில் நண்பர் மதியழகன் என்பவரை கொலை செய்த வழக்கில் கடந்த 2003 ஆம் ஆண்டுநீதிமன்றத்தால்ஆயுள்தண்டனைவிதிக்கப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

பின்னர் 2016 ஆம் ஆண்டு பரோலில் வெளிவந்த குருமூர்த்தி கடலூர் மத்திய சிறைக்கு மீண்டும் திரும்பவில்லை. தொடர்ந்து 7 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த குருமூர்த்தியை உளவுபிரிவினர்அளித்த தகவலின் அடிப்படையில் மயிலாடுதுறை டிஎஸ்பி. சஞ்சீவ்குமார் தலைமையில் மணல்மேடு இன்ஸ்பெக்டர் மாரிமுத்து, தனிப்பிரிவு பாஸ்கர் ஆகியோர் அடங்கிய போலீசார் குத்தாலம் தாலுக்கா வில்லியநல்லூர் பகுதியில் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

பின்னர் குருமூர்த்தி மணல்மேடு போலீஸ் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை செய்து வருகின்றனர்.


# கோரக்கர் சித்தர் ஆசிரமத்தில் அன்னாபிஷேகம்



நாகப்பட்டினம், அக். 30

நாகப்பட்டினம் அருகே வடக்கு பொய்கைநல்லூரில் உள்ள கோரக்க சித்தர் ஆசிரமத்தில் ஆண்டுதோறும் பவுர்ணமி ஐப்பசி பரணி விழா 2 நாள்கள் விமரிசையாக நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான ஐப்பசி மாத பவுர்ணமி விழா கோரக்க சித்தர் ஆசிரமத்தில் கோலாகலமாக தொட ங்கியது. இதை யொட்டி விழாவின் முதல் நாளான நேற்று அன்னாபிஷேகம் நடைபெ ற்றது. முன்னதாக கோரக்க சித்தர் ஜீவசமாதி பீடத்தில் மஞ்சள், பால், தயிர், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பொருட்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. இதை யடுத்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பி க்கப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# உலக அமைதிக்காக திருமூலர் சித்தருக்கு சிறப்பு வழிபாடு



கிருஷ்ணகிரி, அக்.30

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் ஸ்ரீ சந்திரசூடேஸ்வரர் மலைக்கோவில்கு செல்லும் வழியிர கால பைரவர் கோவில் உள்ளது. இங்கு, உலக அமை திக்காகவும், உலக நன்மைக்காகவும் ஆருத்ரா சித்தர்கள் அறக்கட்டளை சார்பில், சித்த காசிராஜன் தலைமையில், திருமூலர் சித்தருக்கு நேற்று சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

விழா நிகழ்ச்சிகள் கணபதி ஹோமத்துடன் தொடங்கி, தொடர்ந்து பைரவர் பூஜை, நந்தீஸ்வரர் பூஜை, வராகி அம்மன் பூஜை, கோமாதா பூஜை மற்றும் சிறப்பு வழிபாடுகளும், ஹோமங்களும், லிங்க சித்த ருக்கு சிறப்பு அபிஷே கமும் நடை பெற்றன.

பின்னர் பைரவர் தீபம், நந்தீஸ்வரர் தீபம், வராகி அம்மன் தீபம் ஏற்றி வைத்து வழிபாடு நடத்தப்பட்டது. தலைமை அர்ச்சகர் சண்முகம், வேள்வி நிகழ்ச்சிகளை நடத்தினார்.

இதில், ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தய்யா, மாநகராட்சி கவுன்சிலர்கள் கிருஷ்ணவேணி ராஜி, கலா சந்திரன் ஆகியோரும், ஜெயகுமார் உள்ளிட்ட சிவனடியார்கள், சித்தரடியார்கள் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

விழாவை முன்னிட்டு பொது மக்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது.

# நெல்லை சோதனை சாவடியில் போலீஸ் ஏட்டு தாக்கியதாக கூறி வக்கீல்கள் நள்ளிரவில் சாலை மறியல்



நெல்லை, அக். 30

நெல்லை கே.டி.சி. நகரில் உள்ள சோதனை சாவடியில் இரவு பணியில், பாளை போலீஸ் ஏட்டு அல்டஸ் பிபின்(வயது 44) என்பவர் இருந்தார்.

அப்போது அந்த வழியாக வக்கீல் அருள்ராஜ் என்பவர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவர் வேகமாக வந்ததாக கூறி ஏட்டு பிபின், அவரை தடுத்து நிறுத்தி உள்ளார். உடனே அருள்ராஜ்தன்னை வக்கீல் என்று கூறியதும் பிபினுக்கும், அவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் நெல்லை மாவட்ட வக்கீல்கள் சங்க தலைவர் ராஜேஷ்வரன், செயலாளர் மணிகண்டன் ஆகியோர் தலைமையில் வக்கீல்கள் அங்கு விரைந்து சென்றனர். அவர்கள் வக்கீலை, போலீஸ் ஏட்டு பிபின் தாக்கியதாகவும், அவருடைய செல்போனை பறித்துக் கொண்டதாகவும் கூறி திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர்.

உடனடியாக அங்கு போலீஸ் உதவி கமிஷனர் ஆவுடையப்பன், இன்ஸ்பெக்டர் தங்கராஜ் ஆகியோர் விரைந்து வந்து வக்கீல்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

பின்னர் வக்கீல்கள் சார்பில் சம்பந்தப்பட்ட போலீஸ்காரர் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு அளிக்க முடிவு செய்யப்பட்டது தொடர்ந்து வக்கீல்கள் அங்கிருந்து கிளம்பி சென்றனர்.

இதற்கிடையே சம்பவத்தில் இரவு பணியில் இருந்த ஏட்டு பிபின் நெல்லை அரசு ஆஸ்பத்திரியில் இன்று அதிகாலை சிகிச்சைக்காக சேர்ந்தார். அவர் வக்கீல்கள் தன்னை தாக்கியதாக கூறி புகார் அளித்துள்ளார்.

இந்நிலையில் நெல்லை மாவட்ட வக்கீல்கள், வாகன சோதனையின் போது வக்கீலிடம் கடுமையாக நடந்து கொண்ட ஏட்டு பிபின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் கூறி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து இன்று காலை நெல்லை மாநகரபோலீஸ்கமிஷனர் மகேஸ்வரியை நெல்லை மாவட்ட வக்கீல்கள் சங்க தலைவர் ராஜேஸ்வரன், செயலாளர் மணிகண்டன் ஆகியோர் தலைமையில் ஏராளமான வக்கீல்கள் சந்தித்து புகார் மனு அளித்தனர்.

அதில் வக்கீலை அவதூறாக பேசி தாக்குதல் நடத்திய தலைமை காவலர் பிபின் மீது நடவடிக்கை எடுக்க கோரி நள்ளிரவில் புகார் மனு அளித்தோம். அதன் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

தற்போது வக்கீல் மீது பொய் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஏட்டு பிபின் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். எனவே இது தொடர்பாக விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருந்தனர்.

# விவசாயிகளுக்கு ஒரு பிரச்சினை என்றால் கண்டிப்பாக கேட்போம்: கிருஷ்ணகிரியில் ஆர்.காமராஜ் எம்.எல்.ஏ. பேச்சு



திருத்துறைப்பூண்டி, அக். 30

அ.தி.மு.க. 52வது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் திருத்துறைப்பூண்டி அடுத்த பாமணி கடைதெருவில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் சிங்காரவேலு தலைமை தாங்கினார். நகரசெயலாளர் டி.ஜி. சண்முகசுந்தர், முன்னாள் ஒன்றிய செயலாளர் வெற்றிவேல், முத்துப்பேட்டை ஒன்றிய செயலாளர் நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ் எம்.எல்.ஏ. கலந்து கொண்டார். பின்னர் அவர் பேசுகையில்:

டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக கடந்த ஜூன் மாதம் 12ந் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. ஆனால் கடைமடை பகுதிக்கு தண்ணீர் செல்லாததால் 3 லட்சம் ஏக்கர் குறுவை பயிர்கள் கருகி நாசமாகின. முந்தைய எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி காலத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணங்களும், பயிர் காப்பீடும் வழங்கப்பட்டது. ஆனால், தற்போது ஹெக்டருக்கு ரூ.13 ஆயிரத்து 500 மட்டுமே நிவாரணமாக அரசு வழங்குகிறது.

நாங்கள் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் ஒரு பிரச்சினை என்றால் கண்டிப்பாக கேட்போம். கேட்பது மட்டுமல்லாமல் அதை நிறைவேற்றும் அதிகாரத்திற்கும் கூடிய விரைவில் வருவோம்

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஊராட்சி தலைவர் தமிழ்மணி நன்றி கூறினார்.

# சேலம் மார்க்கெட்டுகளில் 1 கிலோ பீன்ஸ் ரூ.100க்கு விற்பனை

சேலம், அக். 30

சேலம் மாவட்டத்தில் 11 உழவர் சந்தைகள் மற்றும் தினசரி சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த சந்தைகளுக்கு கன்னங்குறிச்சி, ஓமலூர், மல்லூர், மேட்டூர், பனமரத்துப்பட்டி, வீராணம், வாழப்பாடி, மேட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் காய்கறிகள் கொண்டு வந்து விற்கின்றனர்.

மேலும் ஆந்திரா, பெங்களூரு, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் வெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக சேலம் மார்க்கெட்டுகளில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.40 முதல் ரூ. 50க்கும் சின்ன வெங்காயம் 50 ரூபாயக்கும் விற்பனையானது. தற்போது உழவர் சந்தை மற்றும் மார்க்கெட்டுகளில் பெரிய வெங்காயம் 70 ரூபாய்க்கும், சின்ன வெங்காயம் 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல் உழவர் சந்தைகள் மற்றும் திருமணிமுத்தாறு ஆற்றோரம், வ.உ.சி, பால் மார்க்கெட்டுகளில் காய்கறிகளின் வரத்து குறைவால் விலை சற்று உயர்ந்துள்ளது.

தக்காளி கிலோ ரூ.20 முதல் ரூ.25க்கு விற்கிறது.

கேரட் கிலோ ரூ.40, பீன்ஸ் ரூ.100, அவரை ரூ.50, உருளை ரூ.56, பாகற்காய் ரூ.35, கத்தரி ரூ. 24, வெண்டைக்காய் ரூ.25, முருங்கைக்காய் ரூ.50 முதல் ரூ.80 வரை, சுரக்காய் ரூ.15, முள்ளங்கி ரூ.20, மாங்காய் கிலோ ரூ.60க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# திருத்துறைப்பூண்டி கோவிலில் ஆன்மீக பயிற்சி வகுப்பு தொடக்கம்



திருத்துறைப்பூண்டி, அக். 30

திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீஸ்வரர் கோவில் மண்டபத்தில் ஆன்மீக பயிற்சி வகுப்பு மற்றும் தமிழக அரசின் போட்டி தேர்வு பயிற்சி வகுப்பிற்கான தொடக்க விழா நடைபெற்றது. விழாவில் ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவன தலைவர் துரை ராயப்பன் தலைமை தாங்கினார்.

கோவில் செயல் அலுவலர் முருகையன் முன்னிலை வகித்தார். முன்னதாக தொழில்நுட்ப கல்வித்துறையில் பணிபுரியும்அன்புபாரதம்போட்டி தேர்வு பயிற்சி மைய நிறுவனர்குட்டியப்பன்அனைவரையும் வரவேற்றார்.

இதில் பயிற்சியாளர் வீர பைரவன் (ஆய்வூர் வி.ஏ.ஓ), பயிற்சியாளர் ஸ்ரீனிவாசன், வக்கீல் நாகராஜன், சர்வாலய அருட்பணி மற்றும் அறப்பணி குழுவை சேர்ந்த ஜெய்பிரகாஷ், முருகன், அரசு வக்கீல் பாஸ்கர் மற்றும் கோவிலில் பணிபுரியும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த பயிற்சியை ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் மற்றும் அன்பு பாரதம் போட்டி தேர்விற்கான பயிற்சி மையத்தின் ஒத்துழைப்போடு கோவில் நிர்வாகத்துடன் இணைந்து கோவிலில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் பொது மக்களுக்கு தினமும் பயிற்சி நடத்த உள்ளது. இதன் மூலம் கோவிலில் பணிபுரியும் அனைத்து ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் பயன் அடைவர்.

இந்த பயிற்சியை போட்டி தேர்வு எழுத உள்ள மாணவர்களும், பொதுமக்களும் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும் என கோவில் செயல் அலுவலர் முருகையன் கேட்டுக்கொண்டார். முடிவில் அரசு வக்கீல் பாஸ்கர் நன்றி கூறினார்.

இதற்கான ஏற்பாடுகளை ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் செய்திருந்தது. தமிழக அரசு அறிவித்துள்ள கோவில் செயல் அலு வலர் தேர்வி ற்கான பயிற்சி வகுப்பும் கோவிலில் பணிபுரி பவர்களுக்காக தொடங்கப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜேடர்பாளையம் போலீஸ் நிலையத்திற்கு இன்ஸ்பெக்டரை நியமிக்க 52 கிராம மக்கள் கோரிக்கை

பரமத்திவேலூர், அக். 30

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா ஜேடர்பாளையத்தில் போலீஸ் நிலையம் உள்ளது. இப்பகு தியில் விவசாயம், நெசவு பட்டு தொழிலும் சிறந்து விளங்குகிறது. மேலும் அணைக்கட்டில் அண்ணா பூங்கா உள்ளது. இப்பகுதியில் உள்ள 52 கிராமங்கள் ஜேடர்பாளையம் போலீஸ் நிலையம் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் பணியிடம் நீண்ட வருடங்களாக நிரப்பப்படாமல் உள்ளது. தற்போது வரை பரமத்தி போலீஸ் நிலையத்தில் உள்ள இன்ஸ்பெக்டர் ஜேடர்பாளையம் பொறுப்பு பதவியில் உள்ளார்.

ஜேடர்பாளையம் அருகே கடந்த மார்ச் மாதம் 11ந்தேதி இளம் பெண் ஒருவர் பலாத்காரம் செய்து கொல்லப்பட்டார். இதைத்தொடர்ந்து ஜேடர்பாளையத்தில் தீ வைப்பு சம்பவம், மரங்கள்வெட்டி சாய்ப்பு சம்பவம் நடந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்பு 2,000 க்கும் மேற்பட்ட வாழைமரங்கள் மற்றும் பாக்கு மரங்களை மர்மநபர்கள் வெட்டி சாய்த்தனர். தொடர்ந்து இதுபோன்ற அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் இல்லாததால் பொதுமக்கள் தங்களது புகார்களை தெரிவிக்க பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும் போலீஸ் இன்ஸ்பெக்டரை நேரில் சந்திக்க 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பரமத்திக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால் கிராம மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

மேலும் ஜேடர்பாளையம்போலீஸ்நிலையத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் அனுமதி, கையெழுத்துக்காகவும் காத்திருக்கும் எப்.ஐ.ஆர். மற்றும் இதர கோப்புகள் கால தாமதமாக ஆகிறது. இதனால் நேர விரையம் ஆகின்றது. ஆகவே ஜேடர்பாளையம் போலீஸ் நிலையத்துக்கு நிரந்தர போலீஸ் இன்ஸ்பெக்டர் நியமிக்க வேண்டும் என 52 கிராம மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இது குறித்து நாமக்கல் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ராஜேஷ் கண்ணனிடம் கேட்டபோது, கடந்த காலங்களில் ஜேடர்பாளையம் அமைதியான ஏரியாவாக இருந்தது.

மேலும் ஜேடர்பாளையம் சிறிய ஏரியாவாகவும் உள்ளது. அங்கு அதிக குற்றங்கள் பதிவாகவில்லை. தற்போது கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட அசம்பாவிதங்களால் இத்தகைய சூழ்நிலை உள்ளது. வரும் காலங்களில் அரசு உத்தரவுபடி தற்போது உள்ள சப்இன்ஸ்பெக்டர்கள் இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு ஏற்படும்போது ஜேடர்பாளையத்திற்கு புதிய போலீஸ் இன்ஸ்பெக்டர் நியமிக்க வாய்ப்பு உள்ளது என கூறினார்.

# 2 கோவில்களின் பூட்டை உடைத்து துணிகர கொள்ளை

உப்பிலியபுரம், அக்.30

உப்பிலியபுரத்தை அடுத்துள்ள தெற்கு விசுவாம்பாள் சமுத்திரம் கோவில்களில் பூட்டுகள் உடைக்கப்பட்டு துணிகர கொள்ளை நடைபெற்று உள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உப்பிலியபுரம் ஒன்றியம் பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சியை சேர்ந்த தெற்கு விஸ்வாம்பாள் சமுத்திரத்தில் பிரதான சாலையில் அமைந்துள்ளது மகா மாரியம்மன் கோவில். இந்த கோவிலில் நேற்று சந்திர கிரகணத்தை முன்னிட்டு வழக்கமான பூஜைகளை முன்னதாகவே முடித்துவிட்டு கோயில் பூசாரி செல்வராஜ் மாலை 6 மணிக்கு கோவிலை பூட்டி விட்டு சென்று உள்ளார்.

சந்திர கிரகண பரிகார பூஜைகளை செய்வதற்காக வந்தவர் கோயிலின் கேட்டில் உள்ள பூட்டுகள் உடைக்கப்பட்டும் உள்பிரகாரத்தில் உள்ள மாரியம்மன் அர்த்த மண்டப கதவுகள் பூட்டு உடைக்கப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உள்ளே சென்று பார்த்த பொழுது மாரியம்மன் சிலையில்இருந்தஇரண்டு மாங்கல்யங்கள் களவு போனது தெரிய வந்தது இதனையடுத்து உப்பிலியபுரம் காவல் நிலையத்திற்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதேபோல் தெற்கு விஸ்வாம்பாள்சமுத்திரம் பிரதான சாலையில் உள்ள விசாலாட்சி அம்பாள் உடனுறை காசி விஸ்வநாதர் கோவிலில் நேற்று அன்னாபிஷேக பூஜைகள் நடைபெற்றது.

சந்திரகிரகணத்தை முன்னிட்டு வழக்கத்திற்கு முன்னதாகவே மாலை அன்னாபிஷேக பூஜைகள் முடிவடைந்ததன் பெயரில் கோயில் குருக்கள் கார்த்திக் கோவில் கதவுகளை மூடி பூட்டிவிட்டு சென்று உள்ளார்.

சந்திரகிரகண பரிகார பூஜைகளை செய்வதற்காக கோவிலுக்கு வந்தவர் அம்மன்கோயில்பூட்டுகள் உடைக்கப்பட்டு இருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்த அவர், உள்ளே சென்று பார்த்துள்ளார். அங்கு விசாலாட்சி அம்மன் சிலையில் இருந்த மாங்கல்யம் திருடு போயிருந்தது கண்டு போலீசாருக்கு தகவல் அளித்தார்.

தகவலின் பேரில் உப்பிலியபுரம் சப்இன்ஸ்பெக்டர்கள் பிரகாஷ் செபாஸ்டின், சந்தியாகு பாலமுருகன், மாணிக்கம் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து இரண்டு கோவில்களிலும் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் களவு போன, சிவன் கோயிலில் ஒரு திருமாங்கல்யம், மாரியம்மன் கோவிலில் இரண்டு திருமாங்கல்யம் என கோவில் தங்க நகைகளின் மதிப்பு இரண்டு லட்சம் இருக்கும் என்பது தெரிய வந்தது.

2 கோவில்களும்அமைந்துள்ள இடம் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியாகும். இருப்பினும் நேற்று சந்திர கிரகணம் நடைபெற்றதால் மக்கள் நடமாற்றம்குறைவாககாணப்பட்டது. இதனை கொள்ளையர்கள் சாதகமாக பயன்படுத்தி இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம் என்பதும் போலீசார் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது குறித்து வழக்கு பதிந்துள்ள போலீசார் கொள்ளையனை தேடி வருகின்றனர்.

# 137 வருடங்களை கடந்த முல்லை பெரியாறு அணை ஒப்பந்தம்

கிருஷ்ணகிரி, அக். 30

முல்லை பெரியாறு அணை தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்ட மக்களின் நீராதார பிரச்சினையாக உள்ளது. இந்த அணை கேரள மாநில எல்லைக்குள் இருந்தாலும், அணை முழுக்க முழுக்க தமிழகத்திற்கு சொந்தமானது. கடந்த ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1886ம் ஆண்டு பெரியாறு அணையின் குறுக்கே 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அணை கட்டப்பட்டது.

ஆங்கிலேய பொறியாளர் கர்னல் ஜான்பென்னிகுவிக் மேற்பார்வையில் 9 வருடங்களாக கட்டுமான பணிகள் நடந்து 1895ம் ஆண்டு முடிவடைந்தது. இந்த அணையில் இருந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கொடுப்பதற்காக 1886ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் தேதி அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தான மன்னர் ஸ்ரீ மூலம் திருநாள் முன்னிலையில் திவான் ராமையங்கார், சென்னை மாகாணத்தின் சார்பில் கொச்சி திருவிதாங்கூர் பொறுப்பில் இருந்த ஜான் சைல்டு ஹானிங்டன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

999 வருடங்களுக்கு இந்த அணையில் இருந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும். அதுவரை அணை தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டில் தான் இருக்கும். கேரளாவிற்கு குத்தகை பணமாக ஏக்கருக்கு ரூ.5 வழங்க வேண்டும் என்பது உள்பட 7 நிபந்தனைகளுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் 1970ம் ஆண்டு மே மாதம் 29ம் தேதி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அப்போது குத்தகை பணம் ரூ.30 என்று நிர்ணயிக்கப்பட்டது. முல்லை பெரியாறு அணை நீரை பயன்படுத்தி தமிழ்நாடு தயாரிக்கும் மின்சாரத்திற்காக 1 கி.வாட்டுக்கு ரூ.12 கேரளாவிற்கு கொடுக்க வேண்டும். 30 வருடங்களுக்கு ஒருமுறை மீண்டும் ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. முல்லை பெரியாறு அணை ஒப்பந்தம் கையெழுத்தாகி இன்றுடன் 137 வருடங்கள் ஆகிறது என்பது குறிப்பிட த்தக்கது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 30.10.2023



# இந்தியன்2 அறிமுக வீடியோ ரிலீஸ் எப்போது?



இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் தற்போது இந்தியன் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடித்துள்ளார். இதில் கமலுடன் இணைந்து சமுத்திரக்கனி, பாபி சிம்கா, காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர்.

லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வந்ததையடுத்து சமீபத்தில் நடிகர் கமல்ஹாசன் இப்படத்தின் டப்பிங் பணியை தொடங்கியுள்ளதாக படக்குழு வீடியோ வெளியிட்டு அறிவித்திருந்தது.

இந்நிலையில், 'இந்தியன் 2' படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் அறிமுக வீடியோ நவம்பர் 3ஆம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது.



# அமிதாப்பிற்கு சொல்லி கொடுக்கும் ரஜினி தலைவர் 170 அப்டேட்

இயக்குனர் ஞானவேல் இயக்கத்தில் ரஜினி புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். இப்படத்திற்கு தற்காலிகமாக 'தலைவர் 170' என படக்குழு தலைப்பு வைத்துள்ளது. லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தில் அமிதாப் பச்சன், மஞ்சு வாரியர், ரித்திகா சிங், துஷாரா விஜயன், ராணா டகுபதி, பகத் பாசில் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். பெரும் எதிர்பார்ப்பில் உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பு மும்பையில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் 'தலைவர் 170' படத்தின் அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, ரஜினி மற்றும் அமிதாப்பின் புகைப்படத்தை பகிர்ந்து மும்பை படப்பிடிப்பு நிறைவுபெற்றதாக படக்குழு அறிவித்துள்ளது. இந்த புகைப்படம் இணையத்தில் ட்ரெண்டாகி வருகிறது.

# தாய்லாந்திற்கு பறக்கும் தளபதி 68 படக்குழு

இயக்குனர்வெங்கட்பிரபுஇயக்கத்தில்உருவாகும்புதியபடத்தில்விஜய்நடிக்கிறார். தளபதி 68 என தற்காலிகமாக பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த படத்தில் பிரசாந்த், மோகன், பிரபுதேவா, ஜெயராம், கணேஷ், யோகிபாபு, அஜ்மல் அமீர், வைபவ், பிரேம் ஜி, அரவிந்த் ஆகாஷ், அஜய் ராஜ், சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

கல்பாத்தி எஸ் அகோரம் சார்பில் ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். சித்தார்த்த முனி ஒளிப்பதிவு செய்கிறார். சமீபத்தில் இப்படத்தின் பூஜை தொடர்பான வீடியோவை படக்குழு வெளியிட்டது.

இந்நிலையில், தளபதி 68 படத்தின்படப்பிடிப்பு குறித்ததகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் படப்பிடிப்பிற்காக படக்குழு நவம்பர் 1ஆம் தேதி பாங்காக் செல்லவுள்ளதாகவும்அங்குபிரமாண்டசேஸிங்காட்சிஒன்றைபடமாக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதை முடித்துவிட்டு அடுத்தக்கட்ட படப்பிடிப்பை தென்னாப்பிரிக்காவில் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# லியோ வசூலுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை லோகேஷ் கனகராஜ்

லோகேஷ்கனகராஜ்இயக்கத்தில்விஜய்நடிப்பில்சமீபத்தில்வெளியானதிரைப்படம் 'லியோ'. செவன் ஸ்கிரீன் ஸ்டூடி யோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ள இந்த படத்திற்கு அனிருத் இசை யமை த்துள்ளார். இந்த படத்தில் திரைப்பிரப லங்கள் பலர் நடித்துள்ளனர். 'லியோ' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் கலவை யான விமர்சனத்தை பெற்றா லும் வசூல் ரீதியாக பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. இதையடுத்து சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட இயக்குனர் லோகேஷ் கனகராஜிடம் 'லியோ' வசூல் தொடர்பான கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு, "திரைப்படத்தின் கலெக்ஷனுக்கும்நமக்கும்எந்தசம்பந்தமும்இல்லைஎன்றுமுன்பேசொல்லியிருந்தேன். அதை தயாரிப்பாளர்கள் பார்த்துக் கொள்வார்கள். திரையரங்கில் மக்கள் ரெஸ்பான்ஸ் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன். எல்லாருக்கும் ரொம்ப பிடித்திருப்பதாக கூறுகிறார்கள். இரண்டாம் பாதியில் கொஞ்சம் தொய்வு இருந்ததாக கலவையான விமர்சனங்களும் இருந்தது அதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறினார்.

# கங்குவா சிறப்பாக வந்து கொண்டிருக்கிறது அப்டேட் கொடுத்த சிவா



இயக்குனர் ராஜு முருகன் இயக்கத்தில் நடிகர் கார்த்தி கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'ஜப்பான்'. இதில் கதாநாயகியாக 'துப்ப றிவாளன்', 'நம்மவீட்டு பிள்ளை' போன்ற படங்க ளில் நடித்த அனு இமானு வேல் நடித்துள்ளார். இப்ப டத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரித்துள்ளது. 'ஜப்பான்' திரைப்படம் தீபா வ ளி யன் று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இதையடுத்து இப்படத்தின் இசை வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில் திரைப்பிரபலங்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இயக்குனர் சிறுத்தை சிவா, "எல்லோரும் சிறுத்தை சிவானு சொல்லும் அளவிற்கு 'சிறுத்தை' படம் அமைந்தது. 'கங்குவா' ரொம்ப சிறப்பாக வந்து கொண்டிருக்கிறது. வித்தியாசமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். சூர்யாசார்கடினஉழைப்பைகொடுத்து நடித்து வருகிறார். விரைவில் நிறைய அப்டேட்கள் கொடுக்கிறேன்" என்று கூறினார்.

# எனக்கு இன்னொரு முகம் இருக்கு.. ஆணழகன் போட்டியில் அசத்திய ரோபோ சங்கர்



தனியார் தொலைக்காட்சி காமெடி நிகழ்ச்சிகளில் மிமிக்ரி ஆர்டிஸ்டாக பயணத்தை தொடங்கியவர் ரோபோ சங்கர். அதன்பின்னர் தமிழ் திரையுலகில் தீபாவளி, வாயை மூடி பேசவும், மாரி, புலி, வேலைன்னு வந்துட்டா வெள்ளக்காரன், வேலைக்காரன், ஹீரோ, உள்ளிட்ட பல படங்களில் நகைச்சுவை நடிகராக வலம் வந்து ரசிகர்களை கவர்ந்தார். தமிழ்திரையுலகின்முன்னணி நடிகர்களின் படங்களில் நடித்து பாராட்டுக்களை பெற்றார்.

இவர் ஆணழகன் போட்டியில் கலந்து கொண்டு மிஸ்டர் மதுரை, மிஸ்டர் தமிழ்நாடு போன்ற பட்டங்களை பெற்றுள்ளார். இவர் ரோபோ போல் உடலை அசைத்து ரசிகர்களை கவர்ந்ததால் தான் இவருக்கு ரோபோ சங்கர் என பெயர் வந்தது. நல்லஉடல்வாக்குடன்இருந்தரோபோசங்கர்மஞ்சள்காமாலையினால் பாதிக்கப்பட்டு மிகவும் மெலிந்து காணப்பட்டார். இதையடுத்து இவர் பல முயற்சிகளுக்கு பின்னர் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பி வருகிறார்.

இந்நிலையில், ரோபோசங்கர்ஆணழகன்போட்டியில்கலந்துகொண்டுள்ளார். அதாவது, மதுரையில் நடைபெற்ற 37 வது ஆண்டு ஆணழகன் போட்டியில் 25 ஆண்டுகளுக்கு பின்னர் நடிகர் ரோபா சங்கர் கலந்துகொண்டு சிறப்பு விருந்தினருக்கான பிரிவில் தனது கட்டுமஸ்தான உடல் பாவனைகளை செய்துகாட்டி அசத்தினர். இது தொடர்பான புகைப்படங்கள் வைரலாகி வருகிறது.



# லேபில் எப்போது: ரிலீஸ் தெரியுமா?



பிரபல இயக்குனர் அருண்ராஜா காமராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள வெப் தொடர் 'லேபில்'. இதில் ஜெய் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக தன்யாஹோப்நடித்துள்ளார். மேலும், மகேந்திரன், ஹரிசங்கர் நாராயணன், சரண் ராஜ், ஸ்ரீமன், இளவரசு மற்றும் சுரேஷ் சக்ரவர்த்தி ஆகியோர் முக்கிய க தா பா த் தி ர த் தி ல் நடித்துள்ளனர்.

அருண்ராஜா காமராஜின் முதல் வெப்தொடரான 'லேபில்' தொடருக்கு சாம் சி.எஸ் இசையமைக்க ஒளிப்பதிவை தினேஷ் கிருஷ்ணன் செய்துள்ளார். பி.ராஜா ஆறுமுகம் படத்தொகுப்பாளராகவும், வினோத் ராஜ்குமார் கலை இயக்குனராகவும் பணியாற்றியுள்ளனர். இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், 'லேபில்' வெப்தொடரின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இந்த வெப்தொடர் நவம்பர் 10ஆம் தேதி முதல் டிஸ்னிபிளஸ்ஹாட்ஸ்டார்ஓடிடிதளத்தில்ஒளிப்பரப்பாகவுள்ளது. இதனைபடக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது.

# சிரோ படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியது



அறிமுக இயக்குனர் விவேக் ராஜாராம் எழுதி இயக்கும் திரைப்படம் 'சிரோ'. இந்த படத்தில் மலையாள நடிகர் அக்ஷய் ரா த ா கி ரு ஷ் ண ன் கதாநாயகனாக நடிக்கிறார். கமர்ஷியல் பைலட்டான பிரார்த்தனா சப்ரியா இந்தப் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், ரோகிணி, லிஷா சின்னு, நோபல் ஆகியோர் முக்கிய க த ா ப ா த் தி ர ங் க ளி ல் நடிக்கின்றனர்.

மில்லியன் ஸ்டுடியோஸ் எம்.எஸ்.மன்சூர் தயாரிக்கும் இப்படத்திற்கு கிஷன் சி.வி. ஒளிப்பதிவு செய்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு அக்டோபர் 27 அன்று எளிய பூஜையுடன் தொடங்கியது. இந்தப் பூஜையில் நடிகர்கள் மற்றும் படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

படம் குறித்து தயாரிப்பாளர் எம்.எஸ்.மன்சூர் கூறியதாவது, 'சிரோ' படத்தின் படப்பிடிப்பு எளிய பூஜையுடன் தொடங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ஒரே ஷெட்யூலில் முழு படப்பிடிப்பையும் முடிக்க திட்டமிட்டுள்ளோம். மில்லியன் ஸ்டுடியோவில் உள்ள நாங்கள் எப்போதும் உயர்தர தொழில்நுட்பஅம்சத்துடன்நல்லகதையம்சம்சார்ந்ததிரைப்படங்களையேஉருவாக்க விரும்புகிறோம்.

எங்களின் முதல் தயாரிப்பான 'வெப்பன்' படத்தில் சத்யராஜ் மற்றும் வசந்த் ரவி ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்தின் புரொமோ ரசிகர்கள் மத்தியில் ஏற்கனவே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. அதுபோலவே, 'சிரோ' திரைப்படம் மூலம் சிறந்த திரையரங்க அனுபவத்தை பார்வையாளர்களுக்கு கொடுப்பதற்காக சிறந்த சிஜி மற்றும் விஎஃப்எக்ஸ்/அனிமேஷன் கலைஞர்களை இந்த படத்தில் பணிபுரிய வைத்துள்ளோம் என்றார்.

# Friends டிவி தொடர் நடிகர் மர்மசாவு.. அதிர்ச்சியில் ரசிகர்கள்



1994 முதல் 2004 வரை ஒளிபரப்பான அமெரிக்க டிவி தொடர் 'பிரெண்ட்ஸ்'(Friends). 10 சீசன்களாக வெளியான இந்த தொடருக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உண்டு. இதில் சாண்ட்லர் பிங் என்ற கதாபாத்திரத்தில் நடித்தவர் மேத்யூ பெர்ரி. இவர் பல தொலைக்காட்சி தொடர்கள் மற்றும் படங்களில் நடித்துள்ளார். 54 வயதான மேத்யூ பெர்ரி கலிபோர்னியாவின், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வசித்து வருகிறார்.

இந்நிலையில், இவர் தனது வீட்டின் குளியலறையில் உள்ள பாத் டப்பில் இறந்து கிடந்துள்ளார். இது பற்றி அறிந்ததும்போலீசார்அங்குசென்றுபிணத்தைகைப்பற்றி விசாரணைநடத்திவருகின்றனர். அவர்எப்படி இறந்தார்? என தெரியவில்லை. மதுவுக்கு அடிமையான நடிகர் மேத்யூ பெர்ரி பல ஆண்டுகளாக வலி நிவாரண மாத்திரைகள் சாப்பிட்டு வந்தார். மேலும் போதை மறுவாழ்வு மையத்திற்கு சென்றும் சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேத்யூ பெர்ரி மரணம் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேத்யூ பெர்ரி மறைவு ரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவரது மறைவிற்கு பிரபலங்கள் பலரும் சமூக வலைதளத்தில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# பந்து வீச்சு அபாரம்: இங்கிலாந்தை 129 ரன்னில் சுருட்டி இந்தியா அசத்தல் வெற்றி



இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி லக்னோவில் நடைபெற்றது. முதலில் விளையாடிய இந்தியா 9 விக்கெட் இழப்பிற்கு 229 ரன்கள் எடுத்தது.

பின்னர் 230 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணியின் பேர்ஸ்டோவ், தாவித் மலான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். 2வது ஓவரை முகமது சிராஜ் வீசினார். இந்த ஓவரில் இங்கிலாந்து 13 ரன்கள் எடுத்தது.

4 ஓவரில் 26 ரன்கள் எடுத்ததால் இங்கிலாந்து நல்ல தொடக்கத்துடன் விளையாடியது. 5வது ஓவரை பும்ரா வீசினார். இந்த ஓவரின் 5வது பந்தில் தாவித் மலானை (16) வீழ்த்தினார். அடுத்த பந்தில் ஜோ ரூட்டை டக்அவுட்டில் வெளியேற்றினார்.

அதன்பின் இங்கிலாந்து அணி தடம் புரண்டது. பேட்ஸ்மேன்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். முகமது ஷமி பந்தில் பென் ஸ்டோக்ஸ் ரன் ஏதும் எடுக்காமலும், பேர்ஸ்டோவ் 14 ரன்னிலும் ஸ்டம்பை பறிகொடுத்தனர்.

இதனால் இங்கிலாந்து 10 ஓவரில் 40 ரன்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டை இழந்தது. அதன்பின் இங்கிலாந்து அணியால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. ஜாஸ் பட்லர் 10 ரன்னில் குல்தீப் யாதவ் பந்தில் ஆட்டமிழந்தார்.

மொயீன் அலியை (15) முகமது ஷமி வீழ்த்தினார். கிறிஸ் வோக்ஸை (10) ஜடேஜா வீழ்த்தினார். ஒரு பக்கம் தாக்குப்பிடித்து விளையாடிய லிவிங்ஸ்டோன் 27 ரன் எடுத்த நிலையில் குல்தீப் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதனால் இங்கிலாந்து 100 ரன்கள் எடுப்பதற்குள் 8 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

தொடர்ந்து, டேவிட் வில்லே மற்றும் அடில் ராஷித் ஜோடி விளையாடியது. இதில், அடில் ராஷித் 13 ரன்களில் ஷமியின் பந்து வீச்சில் வீழ்ந்தார்.

9வது விக்கெட் இழந்த நிலையில், டேவிட் வில்லேவுடன் மார்க் வுட் ஜோடி சேர்ந்தார். இதில், ஒரு ரன் கூட எடுக்காமல் மார்க் வுட்டும் அவுட்டானார்.

இறுதியில், 34.5 ஓவரில் அனைத்து விக்கெட் இழப்பிற்கு 129 ரன்கள் மட்டுமே எடுத்து இங்கிலாந்து தோல்வி அடைந்தது.

இந்நிலையில், 100 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபாரமாக விளையாடி இங்கிலாந்தை வீழ்த்தியுள்ளது.

# ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி: மலேசியாவை வீழ்த்தி இந்திய அணி 2வது வெற்றி



பெண்களுக்கான 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி ராஞ்சியில் நடந்து வருகிறது.

இதில் 2வது நாளான நேற்று நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் முன்னாள் சாம்பியனான இந்திய அணி 50 என்ற கோல் கணக்கில் மலேசியாவை தோற்கடித்து தொடர்ந்து 2வது வெற்றியை ருசித்தது. இந்திய அணியில் வந்தனா கட்டாரியா 2 கோலும், சங்கீதா குமாரி, லால்ரெம்சியாமி , ஜோதி தலா ஒரு கோலும் அடித்தனர்.

மற்ற ஆட்டங்களில் சீனஅணி 60 என்ற கோல் கணக்கில் தாய்லாந்தையும், நடப்பு சாம்பியன் ஜப்பான் 40 என்ற கோல் கணக்கில் 3 முறை சாம்பியனான தென்கொரியாவையும் தோற்கடித்தன. போட்டியில் இன்று ஓய்வு நாளாகும். இன்று நடைபெறும் ஆட்டங்களில் தென்கொரியாமலேசியா (மாலை 4 மணி), தாய்லாந்துஜப்பான் (மாலை 6.15 மணி), இந்தியாசீனா (இரவு 8.30 மணி) அணிகள் மோதுகின்றன.



# லக்னோவில் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த தல தோனி

உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகின்றன. இந்நிலையில், உத்தர பிரதேசத்தின் லக்னோவில் உலக கோப்பை தொடரின் 29வது லீக் ஆட்டத்தில் இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதி வருகின்றன.

டாஸ் வென்ற இங்கிலாந்து பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 229 ரன்கள் எடுத்தது.

தொடர்ந்து, 230 ரன்கள் வெற்றி இலக்குடன் இங்கிலாந்து அணி விளையாடி வருகிறது.

இந்நிலையில், பரபரப்பாக நடைபெற்று வரும் இந்த போட்டியை இந்திய கிரிக்கெட் வீரர் எம்.எஸ்.தோனி தனது மனைவி சாக்ஷியுடன் நேரில் கண்டு ரசித்து வருகிறார். இதன் வீடியோ ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.